# பொள்ளாச்சி நகராட்சி

## 26.12.2018 அன்று நடைபெற்ற சிறப்புக் கூட்ட தீர்மானம்

**1306)** பொள்ளாச்சி நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோக திட்டம் 1948 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் 1975, 1995 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்நகராட்சியில் 20253 வீட்டுவரி விதப்புகளும், 4325 வணிக பயன்பாடு வரிவிதிப்புகளும் உள்ளன. தற்போது வரை 14791 வீட்டு உபயோக குடிநீர் இணைப்புகளும், 802 வணிக குடிநீர் இணைப்புகளும் உள்ளன. மீதமுள்ள வரிவிதிப்புகள் அனைத்திற்கும் குடிநீர் இணைப்பு வழங்குமாறு 21.03.2018ல் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நேரிடை ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையரின் அறிவுரையின்படி நகராட்சியே குடிநீர் வீட்டு இணைப்புகள், வீட்டு உரிமையாளருக்கு கொடுக்கும் வகையில் கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலை | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணி | 245.00 |

குடிநீர் திட்டம் பயன்பாட்டிற்கு வந்து பல ஆண்டுகள் ஆகியும், குடிநீர் இணைப்புகளை பொதுமக்களளே முன் வந்து பெறும் பொழுது காலதாமதம் ஏற்படுகிறது. எனவே அனைவரும் பெறும் வகையில் இப்பணிகளை நகராட்சியே செய்யும்போது விரைவில் செய்து முடிக்க முடியும்.

அனைத்து வரி விதிப்புகளுக்கும் 100% சதவீதம் இணைப்பு கொடுக்கும்போது வருவாய் அதிகரிக்கும். மேற்காண் மதிப்பீட்டுத் தொகையை (TUFIDCO) தமிழ்நாடு நகர்ப்புற நிதி உட்கட்டமைப்பு மற்றும் நிதிசேவை மையத்தில் வட்டியில்லா கடனாக பெற அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்கலாம். இத்தொகையினை இணைப்பு அமைத்து பொதுமக்கள் உபயோகத்திற்கு வந்தபின் பயனாளிகளிடம் தவணை முறையில் வசூல் செய்தும், வரும் வருவாயினைக் கொண்டும், பெறப்படும் வட்டியில்லா கடன் தொகையை நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாவண்ணம் திரும்ப செலுத்தலாம். எனவே இதற்கென தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெறவும் மற்றும் வட்டியில்லா கடன் பெறவும் மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 281 /2016 /இ3**